செய்தி வெளியீடு எண்: 740/2018 நாள்: 22.11.2018

**வேலூர் மாவட்டத்தை சார்ந்த திருமணமாகாத, இராணுவத்தில் பணியாற்ற ஆர்வமுள்ள இளைஞர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு!**

**இந்திய விமானப்படைக்கு டிசம்பர் 9 ஆம் தேதி முதல் 14 ஆம் தேதி வரை ஆள்சேர்ப்பு முகாம் நடைப்பெறுகிறது!!**

**திருநெல்வேலி அண்ணா விளையாட்டு அரங்கில் நடைபெறும் ஆள்சேர்ப்பு முகாமில் திறளான இளைஞர்கள் கலந்துகொண்டு பயனடைய வேண்டும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் வேண்டுகோள்!!**

இந்தியாவிலேயேஇந்திய விமானப்படையில் தமிழகத்தை சார்ந்தவர்கள் தான் மிகக்குறைந்தளவில் பணியாற்றுகிறார்கள். இந்திய விமானப்படையில் பணியாற்றி இந்திய நாட்டிற்காக சேவை புரியவும் தமிழகத்தை சார்ந்த இளைஞர்களை ஊக்குவிக்கும் வகையில் இந்திய விமான படையில் ஏர்மேன் குரூப் - Y Non Technical பணியிடத்திற்கு ஆள்சேர்ப்பு முகாம் திருநெல்வேலியில் உள்ள அண்ணா விளையாட்டு அரங்கில் டிசம்பர் 9 ஆம் தேதி முதல் 14 ஆம் தேதி வரை நடைப்பெறவுள்ளது.

டிசம்பர் 9 ஆம் தேதி முதல் 10 ஆம் தேதி வரை சென்னை, கோயம்புத்தூர், திண்டுக்கல், காஞ்சிபுரம், கரூர், கிருஷ்ணகிரி, மதுரை, நாகபட்டினம், புதுக்கோட்டை, சிவகங்கை, தஞ்சாவூர், திருவள்ளூர், திருவாரூர், திருவண்ணாமலை, திருப்பூர், வேலூர் மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களை சேர்ந்த இளைஞர்களுக்கும், டிசம்பர் 9 ஆம் தேதி முதல் 10 ஆம் தேதி வரை அரியலூர், கடலூர், தர்மபுரி, ஈரோடு, கன்னியாகுமரி, நாமக்கள், பெரம்பலூர், ராமநாதபுரம், சேலம், நீலகிரி, தேனி, திருநெல்வேலி, திருச்சி, தூத்துக்குடி, விருதுநகர் மற்றும் புதுச்சேரி மாநிலம் (புதுச்சேரி, காரைக்கால்) பகுதிகளை மாவட்டங்களைச் சார்ந்த இளைஞர்களுக்கும் தேர்வுகள் நடைப்பெறும்.

இத்தேர்வுகளுக்கான கல்வித்தகுதி 12 ஆம் வகுப்பில் சாரசரி 50 சதவிகித மதிப்பெண்களுக்கு குறையாமல் மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சியடைந்து இருக்க வேண்டும். இத்தேர்வுகளில் கலந்து கொள்பவர்கள் 1998 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 14ஆம் தேதியிலிருந்து 2002 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 26ஆம் தேதிக்குள் பிறந்த திருமணமாகாத ஆண்களாக இருக்கவேண்டும்.

தேர்வில் கலந்து கொள்ளும் இளைஞர்கள் தங்களது 12 ஆம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ்கள் (Mark List) (4 நகல்கள்) மற்றும் மாற்று சான்றிதழ்களுடன் (Transfer Cerficicate) (4 நகல்கள்) வந்து கலந்து கொள்ள வேண்டும். அசல் சான்றிதழ்களை பள்ளி கல்லூரிகளில் சமர்ப்பித்திருந்தால் பள்ளி கல்லூரி தலைமை ஆசிரியர் / முதல்வரிடம் அசல் சான்றிதழ்கள் பள்ளி கல்லூரியில் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்ற உறுதி சான்றிதழ்களுடன் சுய சான்றொப்பம் இடப்பெற்ற சான்றிதழ்களை (4 நகல்கள்) சமர்ப்பிக்க வேண்டும். இத்தேர்வில் பங்குபெறும் நபர்கள் வேறு மாவட்டத்தில் ஏதேனும் பள்ளியிலோ கல்லூரிகளிலோ பயின்றிருந்தால் சொந்த மாவட்டத்திற்கான சான்றிதழ்களை சம்பந்தப்பட்ட வட்டாட்சியர்களிடம் இருந்து பெற்று சமர்பிக்க வேண்டும். மேலும் தேர்வில் கலந்து கொள்பவர்கள் பென்சில், எரேசர், ஷார்ப்னர், கம் டியூப், ஸ்டாப்ளர், கருப்பு அல்லது நீல நிற பென், 7 பாஸ்போர்ட் அளவு புகைப்படங்கள் (நவம்பர் 2018 முன்னதாக எடுத்திருக்கக்கூடாது) ஆகியவை எடுத்துவர வேண்டும். மேலும் விவரங்களுக்கு www.airmenselection.cdac.in என்ற இணையதள முகவரியில் பார்வையிட்டு தெரிந்து கொள்ளலாம். இந்த முகாமில் வேலூர் மாவட்ட இளைஞர்கள் கலந்துகொண்டு பயனடையுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.

வெளியீடு:
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், வேலூர்.